இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர்: கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 25-05-2025

# யாருக்கு இழுக்கு?

**உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பைத் தருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒரு உத்தரவு போடுகிறது. அந்த உத்தரவுக்கு சென்னை உயர்நீதி மன்றம் தடை போடுகிறது. உச்சநீதிமன்றத்தைவிட, உயர்நீதிமன்றம் அதிகாரம் பொருந்தியதா?**

**தமிழ்நாடு அரசுக்குத் தடை போடுவதாக நினைத்து, உச்சநீதி மன்றத்துக்கு அல்லவா இழுக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள்?**

**இப்படி ஒரு செயலைச் செய்யப் போகிறார்கள் என்பதை திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் வீரமணி அவர்கள், முன்கூட்டியே உணர்ந்து அறிக்கை வெளியிட்டார்கள். அதுதான் நடந்திருக்கிறது.**

“இந்த வழக்கை இந்த அமர்வு விரைவுபடுத்த அதற்கென்ன அவசியம்? அதுவும் விடுமுறைக் காலத்தில்? உச்சநீதிமன்றத் தீர்ப்பை, உயர்நீதிமன்ற அமர்வு தவறு என்று கூற முடியுமா, சட்டப்படி? இரண்டு வாரத்திற்குள் ஏதாவது தடையாணை போன்று வழங்கலாமா என்று கருதும் திட்டமோ என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கிறது!

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்ற அமர்வு - அதுவும் விடுமுறைக் கால அமர்வு இப்படி விசாரித்து, ஏதாவது அவசர ஆணை பிறப்பிக்கத் துடிப்பது சட்டப்படி செல்லுமா என்பதும் கேள்விக்குறி.

குடியரசுத் தலைவர் உச்சநீதி மன்றத்திடம் ஆலோசனை கேட்டு 14 கேள்விகளை முன்வைத்துள்ள நிலையில், அதே பிரச்சினையை மய்யப்படுத்தி உள்ள ஒரு வழக்கின் விசாரணைக்கு இப்போது உயர்நீதிமன்றம் மிகுந்த அவசரம் காட்டுவது, சட்டப்படியும், நியாயப்படியும் உகந்ததா?” என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். அதுவே நடந்து விட்டது.

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு உச்சநீதிமன்றம் வழங்கியது. அதன்படி துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்டங்களை அரசிதழில் தமிழ்நாடு அரசு வெளியிட்டது. இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து வெங்கடாசலபதி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போடுகிறார். அதனை நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், லட்சுமிநாராயணன் அமர்வு விசாரிக்கிறது.

**இப்படி ஒரு வழக்கு வருகிறது என்றால், ‘இது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை சேலஞ்ச் செய்யும் வழக்கு. அதனை விசாரிக்க முடியாது’ என்று தள்ளுபடி செய்திருக்க வேண்டும். ‘குடியரசுத் தலைவரே உச்சநீதிமன்றத்துக்கு சில விளக்கங்களைக் கேட்டுள்ளார், எனவே இது உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்கு’ என்று சொல்லி தள்ளுபடி செய்திருக்க வேண்டும்.**

குடியரசுத் தலைவர், ஒன்றிய அரசு, மாநில அரசு, ஆளுநர், அரசமைப்புச் சட்டம் ஆகியவை தொடர்புடைய ஒரு வழக்கில் பொத்தாம் பொதுவாக ‘தடை’ என்று சொல்லி இருக்கிறார்கள். ‘சும்மா’ நடந்து போகும் போது, சைக்கிளைத் தள்ளிவிட்டுப் போவதைப் போல இருக்கிறது இந்த உத்தரவு.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வந்ததால் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியது. இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது. அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவது, பல்கலைக் கழகங்களின் வேந்தராக முதலமைச்சரை நியமிப்பது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய 10 சட்ட மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் தனக்குரிய சிறப்பு அதிகாரம் மூலம் ஒப்புதல் அளித்தது. மசோதாக்கள் குறித்து முடிவெடுக்க ஆளுநருக்கு காலக்கெடு விதித்தும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து ஒப்புதல் வழங்கப்பட்ட மசோதாக்கள் அரசிதழில் வெளியிடப்பட்டு அமலுக்கு வந்துள்ளது. இதனை இங்கிருக்கும் ஆளுநர் ரவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

**தமிழ்நாட்டு ஆளுநர் தனிக் கட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். சிந்தனைகளை ஆணவத்துடன் விதைப்பதுதான் அவரது கொள்கை. தான் தோன்றித்தனமாக கருத்துகளைச் சொல்வதும், அதற்கேற்ப அரசியல் அரங்கை நாசப்படுத்துவதும்தான் அவரது நடத்தைகள் ஆகும். தனது பின்னடைவுகள் மூலமாக அவர் எந்தப் பாடத்தையும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. தனது தோல்விகளை ஒப்புக் கொள்ளத் தெரியாமல், அதில் இருந்து திருந்த முயலாமல், இதுபோன்ற அற்பக் காரியங்களைப் பின்புலமாக இருந்து செய்து வருகிறார் ஆளுநர்.**

ஆளுநர் ‘சேலஞ்ச்’ செய்ய வேண்டியது உச்சநீதிமன்றத்தைத் தான். அவர் போக வேண்டிய இடம் உச்சநீதிமன்றம்தான். ஆனால் தனக்கு வாய்ப்பான இடத்துக்குள் பதுங்க நினைக்கிறார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் வில்சன், காணொலி மூலம் ஆஜராகி வாதிட்டார்.

“துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான யு.ஜி.சி. விதிகளை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, இந்த வழக்கையும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி தமிழ்நாடு அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் இந்த வழக்கை அவசர, அவசரமாக விசாரிக்க எந்த அவசியமும் இல்லை. அரசின் சட்டங்களுக்குத் தடை கோரும் இந்த வழக்கில் தமிழ்நாடு அரசுத் தரப்பில் பதில் அளிக்கப் போதிய அவகாசம் தராமல் விடுமுறை கால அமர்வில் அவசரகதியில் விசாரிப்பது நியாயம் அல்ல. உச்சநீதிமன்ற உத்தரவுப்படியே தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. பா.ஜ.க. நிர்வாகி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் முக்கிய ஆதாரங்கள் மறைக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கில் விரிவான வாதங்களை முன்வைக்க அவகாசம் வழங்க வேண்டும்” என்றும் மூத்த வழக்கறிஞர் வில்சன் கோரிக்கை விடுத்தார்.

“என்ன வாதம் வைத்தாலும் தடைதான்” என்பதைப் போல தடை கொடுத்துள்ளார்கள் ஜி.ஆர்.சுவாமிநாதனும், லட்சுமி நாராயணனும். ‘கிடப்பது கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மணையில் வை’ என்பதைப் போல!

உச்சநீதிமன்றத் தீர்ப்பு என்பது அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கு இணையானது ஆகும். அதற்கே தடை போட என்ன காரணம்?

**தமிழ்நாடு அரசுக்கு இழுக்கு ஏற்படுத்துவதாக நினைத்து, உச்சநீதிமன்றத்துக்கு இழுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணை நடந்த முறையும், அளிக்கப்பட்ட தீர்ப்பும் எதிர்காலத்தில் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகும்.**



புதுடெல்லியில் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (23.5.2025) புதுடெல்லி வந்தடைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை விமான நிலையத்தில் கழக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, எஸ்.ஜெகத்ரட்சகன், பி.வில்சன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார் ஆகியோர் சால்வை அணிவித்து, மலர்க்கொத்து வழங்கி வரவேற்றனர்.




புதுடெல்லியில் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (23.5.2025) புதுடெல்லி வந்தடைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, விமான நிலையத்தில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## அரசியலமைப்புச் சட்டத்தைச் சிதைக்க முயலும் பாசிசத்தை

# ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரண்டு நின்று வீழ்த்துவோம்!

## கந்தர்வக்கோட்டை அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 23.5.2025 ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, ஆதிக்கவாதிகளை நோக்கி அறிவு சாட்டையைச் சுழற்றிய சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவச் சிலையை புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டையில் கொட்டும் மழையில் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை, மே 25-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவச் சிலையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொட்டும் மழையில் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

அப்போது அவர் அண்ணல் இயற்றிய அரசியலமைப்புச் சட்டத்தை சிதைக்க முயலும் பாசிசத்தை ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரண்டு வீழ்த்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து எழுச்சி மிக்க உரையாற்றினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

எனது அரசியல் வழிகாட்டியாக எப்போதும் பெருமையாக சொல்லக் கூடிய எழுச்சிதமிழர் திருமாவளவன் அவர்களின் முன்னிலையில், அவரோடு இணைந்து அம்பேத்கர் அவர்களின் சிலையை திறக்கின்ற வாய்ப்பை அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றிலிருந்து தொடங்கி மூன்று நாட்களுக்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள் பயணிக்க உள்ளேன். அதில் முதலில் சிறப்பு நிகழ்ச்சியாக அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறந்து வைத்துவிட்டு, மக்கள் பணி ஆற்ற அடுத்த மூன்று நாட்கள் செல்ல இருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வரும்போது, இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடக்குமா என்று தெரியவில்லை. நன்றாக மழை பெய்துகொண்டு இருக்கிறது. எவ்வளவு தடங்கல் வந்தாலும், இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்து இருக்கிறோம்.

### மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி.

இதிலிருந்து என்ன தெரிகிறது. எவ்வளவு தடங்கல்கள் வந்தாலும், நம் தலைவர் அவர்கள் 2024ஆம் ஆண்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை அமைத்தார்கள். ஒன்றிய பா.ஜ.க அரசு மிருக பலத்தோடு நாங்கள் ஆட்சி அமைப்போம் என்று சொன்னார்கள். ஆனால், கடைசியில் அவர்களால் மெஜாரிட்டி பெற முடியவில்லை. அதற்கு, முழுக்காரணம் நம் முதலமைச்சர் அவர்கள், நம் தலைவர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி.

### பாசிச பா.ஜ.க அரசு

தமிழ்நாட்டில் 39க்கு 39 தொகுதிகளில் தமிழ்நாட்டு மக்கள் நம்மை வெற்றி பெற வைத்தார்கள். அதனால்தான், இப்போது மெஜாரிட்டி இல்லாமல், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு இயங்கிகொண்டு இருப்பதால் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு இன்னும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றாமல் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இல்லையென்றால், அதையும் மாற்றி இருப்பார்கள். அதற்கு தடைப் போட்டவர் நம் தலைவர், நம் தமிழ்நாடு அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, இங்கு அண்ணன் திருமாவளவன் அவர்கள் சொன்னதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, காங்கிரஸ் பேரியக்கம், ஆகியோர் இணைந்தது தேர்தல் கூட்டணி கிடையாது. இது கொள்கை கூட்டணி. அதனால்தான், தமிழ்நாட்டு மக்கள் நமக்கு ஆதரவு தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நம் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு சிறப்புடன் செயலாற்றி வருகிறது. நான்காண்டுகள் முடிந்து, இன்னும் 9 மாதங்களில் 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வர இருக்கிறது. நம் முதலமைச்சர், கழகத் தலைவர் சொல்லி இருக்கிறார். குறைந்தது 200 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று. நிச்சயம் வெல்லும், அதில் முதல் தொகுதியாக கந்தர்வக்கோட்டை தொகுதியும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது.

நம் முதலமைச்சர் சொல்வது தான். தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்பை அளித்த சிலை அமைப்புக் குழுவினருக்கும், எழுச்சி தமிழர் அண்ணன் திருமாவளவன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, எம்.எம்.அப்துல்லா, கழக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் நா.இளைய ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் சின்னதுரை, மருத்துவர் வை.முத்துராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதை பித்தன், பெரியண்ணன் அரசு, பெரம்பலூர் கிட்டு, மாநகர மேயர்கள் சண்.இராமநாதன், திலகவதி செந்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் இளமதி அசோகன், டாக்டர்.அம்பேத்கர் அவர்களின் சிலை அமைப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் சுந்தம்பட்டி நாராயணசாமி, பரமசிவம், தமிழ் அய்யா, வெங்கடாச்சலம், சண்முகம், சேட்டு, இராமகிருஷ்ணன், மாயகண்ணு, நாராயணசாமி, சித்திரவேல், வெள்ளைச்சாமி, வைரமூர்த்தி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.